**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத்தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனதுபணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கமொன்றாக அமையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க, பலகலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

**1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக ரூபா 199,494,369 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இல. 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு திணைக்களத்தினால் பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் மீள்மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் 2020 கணக்கு கூற்றிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கிறேன். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி வரை ஒப்பந்தகாரரிடமிருந்த அறவிட வேண்டிய ரூபா 4,145,363 ஆன மின்சார வருமானமொன்று கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | ரூபா 3,207,200 இனை ஜுன் மாதமளவில் அறவிட்டுள்ளதுடன் மீதியை மேலதிக பட்டியல் கொடுப்பனவு இலக்கம் II ஊடாக 2020 ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய பணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் ரூபா 1,188,230 செலுத்தி மருத்துவ பீடம் அமைந்துள்ள காணியை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த கம்பி வேலியை மூலதனமாக்கியிருந்த போதும் ஆண்டு இறுதியளவில் அவை சேதமடைந்திருந்தது. எனினும் அப் பெறுமானத்தை கணக்குகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ஒப்பந்தத்திற்கான இறுதி பட்டியல், செலுத்த வேண்டிய பட்டியலாக கணக்கீடு செய்ய அனுப்பபட்டததனால் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டமாக பெயரிடப்பட்டிருந்ததனால் குறித்த பட்டியல் செலுத்த வேண்டிய ஒப்பந்த பட்டியலாக கணக்கீட செய்யப்பட்டு அக் குறித்த கருத்திட்டம் மூலதனமாக்கப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை கணக்குகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 759,174,529 ஆன 05 நிர்மாண ஒப்பந்தங்களின் பெறுமதி கட்டிட கணக்கிற்கு உட்படுத்தாது | 05 ஒப்பந்தங்களிற்குரிய இறுதி பட்டியல் முன்வைக்கப்படாததால் நடைமுறை வேலைகளாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க சொத்துக்களை மூலதனமாக்கவும் அதற்காக தேய்மான |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ந்தும் நடைமுறை வேலையின் (work in progress) கீழ் காட்டப்பட்டதன் காரணமாக கட்டிட பெறுமதி அப் பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்த திகதி முதல் பெறுமானத்தேய்வு ரூபா 71,489,616 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | ஏற்பாடு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை மற்றும் தனியார் ஊழிய சேவை வழங்கல்களிற்காக அட்டுறு அடிப்படையாக ரூபா 4,957,735 மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுத்திகரிப்பு சேவையிற்காக பொறியியல் மதிப்பீடு, BOQ மற்றும் குறித்த நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த பட்டியல்களை கவனத்திற் கொண்டு அட்டுறு செலவு முன்வைக்கப்பட்டது. பாதுகாப்பு சேவையிற்காக கொடுப்பனவு செய்கையில் சேவை ஒப்பந்த நிபந்தனைகளை மீறியமை மற்றும் சேவையில் காணப்பட்ட குறைபாடுகளிற்கு ரூபா 282,222 குறைக்கப்பட்டு உள்ளதுடன் ஊழிய சேவை வழங்கல் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்கையில் தனியார் ஊழிய சேவை வழங்கலின் கீழ் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சேவைக்கு சமுகளித்த நாட்கள் குறைவடைதல் மற்றும் மேலதிக வேலையில் ஈடுபடுத்திய மணித்தியாலங்கள் குறைவடைதல் காரணமாக அட்டுறு செலவாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியிலும் ரூபா 302,149 குறைத்து கொடுப்பனவு செய்யப்பட்டது. | கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவுகளை சரியாக மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்கான வழங்கல் கடன்கொடுனரிற்காக செலுத்த வேண்டிய ரூபா 329,259 கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | 2019.12.31 திகதி கிடைக்க வேண்டியதாக இருந்த 03 வவுசர்களிற்கான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் 2020 ஆண்டு கிடைத்ததனால் 2019 ஆண்டிற்கு கணக்கு வைக்க முடியவில்லை. | ஆண்டிற்குரிய பொறுப்புக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வெளிவாரி கருத்திட்டங்களிற்காக இணைக்கப்பட்டிருந்த இருவருக்கு பலகலைக்கழகத்தினால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளிற்கு செலுத்தியிருந்த ரூபா 2,072,770 ஆன சம்பளம் 2020 மே 12 வரை குறித்த கருத்திட்டங்களிலிருந்து மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை. | ஒரு அலுவலரினால் செலுத்த வேண்டிய ரூபா 613,836 தொகையை பலகலைக்கழகத்திற்கு மீள்நிரப்புமாறு குறித்த வெளி கருத்திட்டத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ள போதும் இது வரையும் மீள் நிரப்பப்படவில்லை. அவ்வாறு மீள்நிரப்பும் வரை அவருக்கு உரிய 2019 செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் சம்பளமான ரூபா 613,836 தொகையை பல்கலைக்கழகம் தடுத்து வைத்துள்ளது. மேலும் ஒரு அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,458,934 தொகையை மீள்நிரப்புமாறு அறிவித்து 2019.12.18 திகதி உப வேந்தர் மூலம் குறித்த கருத்திட்டப் பொறுப்பு அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | கருத்திட்டங்களிலிருந்து குறித்த மீதிகளை மீள் நிரப்பிக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மூன்று ஆளணி அலுவலர்களிற்கு சம்பளம் மற்றும் ஆராய்சிப் படியாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று மிகையாக கொடுப்பனவு செய்திருந்த ரூபா 238,682 கணக்காய்வு திகதியன்றும் (2020 மே 12) அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையிலிருந்து விலகிய அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்தும் இன்னும் ஒருவரிடமிருந்து 2020 ஜனவரி மாதம் முதல் சம தவணைகளாக சம்பளத்திலிருந்து அறவிடவுள்ளதுடன் ஒரு அலுவளரிடமிருந்து அறவிட வேண்டிய இறுதி தவணையான ரூபா 68,462 யை தற்போதைய தொற்று நோய் நிலைமை குறைந்தவுடன் தீர்ப்பதாக மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | அலுவளர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி பாடநெறிக்காக செலவிடப்பட்ட ரூபா 116,832 ஆன செலவுகளை கணக்காய்வு திகதி (2020 மே 06) வரையும் பல்கலைக்கழகத்திற்கு அறவிட்டிருக்கவில்லை. | பாடநெறிக்கான செலவுகளை தீர்த்துக் கொள்ள போதி நிதி அப் பாடநெறிகளினால் ஈட்டிக் கொள்ள முடியாததால் அப்பீட ஏனைய வெளிவாரி பாடநெறி வருமானத்தில் இருந்து அப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறித்த மீதிகளை அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **<u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை</u>** | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 383 | வங்கி இணக்கக் கூற்று பிரகாரம் 02 வங்கிக் கணக்குகளிற்குரிய ரூபா 831,700 ஆன இனங்காணப்படாத செலவு மீதியை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்காணப்படாத இம் மீதியை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்காணப்படாத செலவு மீதியை இனங்காண்டு சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 396 (இ) மற்றும் (ஈ) | 02 ஆண்டுகளை விஞ்சிய விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்படாத பெறுமதி ரூபா 47,315 ஆன 07 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இம் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் இக் காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) நிதிப்பிரமாணம் 770 | நீண்ட காலமாக விநியோகிக்கப்படாத ரூபா 961,792 ஆன 22 இருப்பு வகைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிப்பீட்டு அறிக்கை பரிந்துரையின் மீது முன் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் இருப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 நவம்பர் 28 ஆந் திகதி இடம் பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற் குழுவின் 10 ஆம் இலக்க தீர்மானம் | செயற் குழுவின் தீர்மானம் பிரகாரம் சுய நிதியிடல் பாடநெறிகளில் இருந்து கிடைக்கும் பணம் பொது நிதியமொன்றின் கீழ் நடாத்திச் செல்ல வழங்கப்பட்ட ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | திட்டவட்டமாக நிறைவு செய்யப்பட்ட பாடநெறிகளின் மிகைப் பணம் வேலைத் திட்ட அபிவிருத்தி நிதியத்தின் (Programme Development Fund) கீழ் மாற்றுதல் பொருத்தமானதென 63 ஆம் கணக்காய்வு குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அதனால் குறித்த பணம் (Programme Development Fund) வேலைத் திட்ட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின் பல்கலைக்கழக நடவடிக்கைகளின் நிதி விளைவுகளில் ரூபா 205,502,778 பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 159,337,064 ஆனது. மீளாய்வாண்டில் சம்பளங்கள் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சேவைகள் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கப் பெறுமதி அதிகரித்தமை பற்றாக்குறை அதிகரித்தமை தொடர்பில் பிரதான காணரமாக அமைந்திருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு முதல் பற்றாக்குறை குறைவடைந்து / கூடியவாறு காணப்பட்ட போதும் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் பற்றாக்குறை பெறுமான அளவில் 29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தின் பெறுமதி சேர்த்தல் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு இறுதியில் பல்பலைக்கழகத்தின் நடைமுறை சொத்துக்கள் ரூபா 313,742,113 ஆனதுடன், நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 588,226,134 ஆனதில் நடைமுறை விகிதம் 2:1.87 ஆனதுடன், அதன் நியம விகிதம் 2:1 ஆனது. அதன் பிரகாரம் நியம விகிதத்தை விஞ்சிய 0.87 ஆன நடைமுறை பொறுப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வயம்ப பல்கலைக்கழகத்தினால் 2019 செப்தம்பர் மாதம் தொடர்பான மின் பட்டியல் செலுத்த தாமதித்ததன் காரணமாக ரூபா 45,834 தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. | நிர்வாக மற்றும் கல்விசாரா ஆளணி வேலை நிருத்தம் காரணமாக 2019 ஆகஸ்ட் மாத பட்டியலிற்காக குறித்த பணம் செலுத்துதல் தாமதித்ததால் ரூபா 45,834 தொகை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டதது. இதன் பின்னர் தொழிற்சங்க செயற்பாடுகள் நடைபெறும் காலப்பகுதில் இவ்வாறான கொடுப்பனவுளை தாமதமின்றி செலுத்த முயற்சி எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். | தாமதமின்றி கொடுப்பனவு செய்து மேலதிக செலவுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3. 2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பன்னல பிரதேச செயலக அதிகார எல்லையிற்குட்பட்ட மதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,835,000 ஆன 711 பர்சஸினுள் அமைந்துள்ள 08 வயல் காணித் துண்டுகளிற்காக 2013 ஆண்டில் ரூபா 1,013,750 குறித்த பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்துள்ள போதும் குறித்த வயல் காணியை விரைவில் சுவீகரித்துக் கொள்ள மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணித் துண்டுகள் 08 இனை சுவீகரித்துக் கொள்வது தொடர்பாக காணி கையேற்பு சட்டம் 4(4) கீழ் எதிர்ப்பு பரிசோதனையொன்றை மேற்கொள்ள மற்றும் கையேற்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்திக் கொள்ளவதற்காக 38(அ) உப ஏற்பாடுகளின் கீழ் கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்ள பதிவாளரூடாக உயர் கல்வி அமைச்சிற்கு கோரிக்கையொன்று விடப்பட்டுள்ளது. | குறித்த காணியை விரைவில் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினூடாக “The assessment of water and sediment quality and associated sea urchin of the gulf of mannar coastline” எனும் கருத்திட்டத்திற்காக 2014 மற்றும் 2016 ஆண்டுகளில் பல்கலைக்கழத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,437,160 | இதன் முதற்கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2019.08.01 திகதிய உபவேந்தர் அவர்களின் கடிதம் பிரகாரம் குறித்த பெண் உத்தியோகத்தர் உடனடியாக நடைமுறையாகும் வகையில் ஆலோசகராக பல்கலைக்கழகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தற்காலிகமாக | குறித்த கருத்தட்டத்தை விரைவாக செயற்படுத்தி கிடைத்துள்ள நிதியத்தை விரைவாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன பணத்திலிருந்து 2017 ஆண்டு முதல் ரூபா 2,266,439 இனை குறித்த கருத்திட்டத்திற்கு ஈடுபடுத்தாது 3 ஆண்டுகளை விஞ்சிய காலம் முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நின்றுள்ளதுடன் மீண்டும் இக்கருத்திட்ட செயற்பாடுகளை 2020 ஆண்டு முதல் ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | பல்கலைக்கழகத்தினால் போதியளவான தகவல்களை பேணிச் செல்லாததனால் வியாபார கற்கை மற்றும் நிதி பீடத்தின் 2016–2019 காலத்தினுள் கூட்டுத்தொகை ரூபா 1,793,067 ஆன ஆராய்சி படிகளை பெற்றுள்ள 08 விரிவுரையாளர்களினால் ஆராய்ச்சிக்கால முடிவில் ஆராய்ச்சி அறிக்கையை ஆராய்ச்சிக் குழுவிற்கு முன்வைத்து அங்கீகாரத்தை பெற்றுள்ளனரா என்பது பற்றிய தகவல்களை கணக்காய்வு செய்து கொள்ள முடியவில்லை. | அவர்களின் இறுதி ஆராய்சி அறிக்கையை பீட ஆராய்சி குழுவிற்கு சமர்பிக்குமாறு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். எதர்காலத்தில் ஆராய்சியை நிரைவு செய்தவுடன் குறித்த ஆராய்சி அறிக்கையை பீட ஆராய்சி குழுவிற்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென அனைத்து விரிவுரையாளர்களும் அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | ஆராய்சி அறிக்கைகளிற்கான குறித்த அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2011 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் 1/2011 கொண்ட உயர் கல்வி சுற்றறிக்கையின் 03(i) பந்திக்கு முரணாக வியாபார கற்கை மற்றும் நிதிப் பீடத்தின் 07 விரிவுரையாளர்களுக்கு 2015–2019 காலத்தினுள் 12 சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளியீடுகளில் பிரசுறித்து சில ஆண்டுகளை கடந்துள்ள ஆராய்சி அறிக்கைகளுக்கு அதற்கு பின்னாலான ஆண்டுகளில் ஆராய்சிப் படிகளாக ரூபா 2,881,619 செலுத்தப்பட்டிருந்தது. | ஆராயச்சி மேற்பார்வை குழுவொன்று எதிர்காலத்தில் நியமிக்கப்பட்ட பின்னர் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன். | குறித்த குழுவை நியமித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3. 3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வயம்ப பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மற்றும் பௌதீகவியல் கற்கைநெறி அலகு 2018 நவம்பர் முதல் செயற்பட்டுக் கொண்டிருந்த போதும் 2020 மே வரையும் பல்கலைக்கழக சுய நிதி கற்கைநெறிகளை இவ் அலகின் கீழ் உள்ளடக்கியிருக்காததுடன் இவ் அலகிற்காக போதிய ஆளணியினரும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டதாரி மற்றும் சுய நிதி பாடநெறி அலகின் கீழ் அப்பாடநெறியை உள்ளடக்கும் நடவடிக்கைகளை மேற்கொணடிருப்பதுடன் அவ் அலகிற்காக பதிற்கடமை அடிப்படையில் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | குறித்த பாடநெறிகளை குறித்த அலகின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மருத்துவ பீடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 19 சதவீத அளவு ஆளணியினரை மாத்திரமே ஆட்சேர்க்க முடியுமாக இருந்தது. | மருத்துவ பீட பதவிகளிற்காக எதிர்காலத்தில் மேலும் தகுதியானவர்கள் ஆட்சேர்க்கப்படுவர். | குறித்த வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தொழிநுட்ப பீடத்திற்கு 2017/2018 ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களில் 06 சதவீத அளவினர் கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். | 2017/2018 ஆண்டுகளில் இருக்க வேண்டிய மொத்த மாணவர்கள் 483 ஆன போதும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (தற்போதுள்ள மாணவர் எண்ணிக்கை) 450 ஆனது. இதன் பிரகாரம் 33 மாணவர்கள் கற்கைகளுக்கு சமுகமளித்திருக்கவில்லை. சில மாணவர்கள் மூன்றாம் வருடத்திற்கு தகைமை பெறாததால் ஏற்பட்ட பின்னடைவு காரணமாகவும், சில மாணவர்கள் தொழில்களில் ஈடுபடுதல் போன்ற காரணங்களினால் கற்கை நடவடிக்கைகளுக்கு கமுகமளிப்பதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தை விட்டுச் சென்ற மாணவர்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு பாடநெறியை விட்டுச் செல்லும் நிகழ்தகவை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உலக தரப்படுத்தல் மற்றும் இலங்கை பலகலைக்கழக தரப்படுத்தலிற்கமைய 2018 ஆண்டு முறையே 8139 மற்றும் 08 ஆம் இடங்களை பெற்றிருந்த போதும் மீளாய்வாண்டில் முறையே 8358 மற்றும் 08 ஆம் இடங்களை பெற்றிருந்தது. அதன் பிரகாரம் உலக தரப்படுத்தலில் பலகலைக்கழகம் பின்னடைந்தருந்தது. | பலகலைக்கழக தரப்படுத்தலிற்கு பலகலைக்கழக பீட எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, பலகலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் ஆராய்சிகள், ஆராய்சி மாநாட்டிற்கான தகவல்கள் பயன்படுகின்றன. பலகலைக்கழக பீட அளவிற்கு அமைய ஏனைய சாதனங்கள் வளரச்சியடையவில்லை. அதுவும் தரப்படுத்தல் பெறுமானம் கீழ் செல்ல காரணமாகிறது. வயம்ப பலகலைக்கழகத்திற்கு கிடைக்கும் இடத்தை முன்னேற்றிக் கொள்ள 2020 ஆண்டில் ஆராய்சி மாநாடுகள் சிலவற்றை நடாத்த திட்டமிட்டிருந்ததுடன் இவ்வாண்டு நாட்டில் காணப்பட்ட நிலைமையின் முன் அம் மாநாடுகளை நடாத்த திட்டமிட்டதன் பிரகாரம் நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே போன்று பல்கலைக்கழகத்தின் இணையத்தள பக்கத்தினை நிதமும் நாளாதுவரையாக்கி உலக தரப்படுத்தலில் வயம்ப பல்கலைக்கழகத்திற்கு உரிய இடத்தை முன்னேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தரப்படுத்தல்களில் உயர் முன்னேற்றம் ஒன்றை பெற்றுக் கொள்ள குறைபாடுகளை களைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்று உரிய காலத்தில் திரும்பி வராத 07 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 50,781,258 வை அறவிட முயற்சி எடுத்திருக்கவில்லை. | ஐயவினாவில் சுட்டிக் காட்டப்படும் பிணைமுறி உடன்படிக்கையை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறித்த பிணைமுறிப் பணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. 4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 ஆண்டுகளில் திறைசேரி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த மூலதன ஒதுக்கீட்டு பணத்திலிருந்து ரூபா 81,946,192 ஆன நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஜனவரி மாதம் ரூபா 41.8 மில்லியன் மற்றும் 2020 பெப்ரவரி மாதம் ரூபா 71.6 மில்லியனும் குறித்த பட்டியலிற்காக செலுத்தியுள்ளதால் நிதிய குறைபயன்பாடு இடம்பெறவில்லை. | நிதியத்தை விரைவாக வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. 5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 500,000 ஆன வேன் வண்டியொன்று 2014 ஆண்டு முதல் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காத நிலையில், அக் காலப்பகுதியில் திருத்த வேலைகளிற்காக ரூபா 205,264 செலவிடப்பட்டிருந்தது. | தகவல் தொழிநுட்ப மத்திய நிலையத்தில் நடமாடும் பல்ஊடக அலகை அமைப்பதற்காக வளிபதனாக்கி இயந்திரம் ஒன்றை இட்டு பழுதுபார்ததன் பின்னர் ஒப்படைக்கப்படவுள்ளது. திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் வரை பராமரிப்பு அலகின் சேவை தேவைப்பாடுகளிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களை பயனுள்ளவாறு பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. 6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியுடன் இணக்கஞ் செய்கையில் பலகலைக்கழகத்தின் கல்விசார் ஆளணியில் 64 பதவிகளும் கல்விசாரா ஆளணியில் 60 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெற்றிடங்களும் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட போதும் அவ் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| கணக்காய்விற்கு சமர்பிக்கப்படட் தற்போதைய செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த ஆளணியில் வெற்றிடங்கள் 13 சதவீதமாவதுடன் நிரந்தர கல்விசார் மற்றும் உதவி சேவை ஆளணியில் வெற்றிடங்கள் 16 சதவீதமானது. | பலதரப்பட்ட காரணங்களினால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப ப.மா.ஆ சுற்றறிக்கை இலக்கம் 974 பிரகாரம் மீண்டும் திறைசேரியின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினது அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், இதற்காக சில காலஎல்லையொன்று செலவாவதுடன் சுற்றறிக்கை இலக்கம் 876 இன் கீழ் உள்ள பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப உயர் கல்வி அமைச்சிலிருந்து பெயர் பட்டியலை தயாரித்து அனுப்பும் போது ஏற்படும் தாமதமும் வெற்றிடங்களை நிரப்பும் செயற்பாட்டின் வேகம் தொடர்பில் தாக்கமொன்றை ஏற்படுத்துகின்றது. | குறித்த வெற்றிடங்களை விரைவில் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 02 பீடங்களின் முன்னேற்றம் கணக்காய்வு திகதி வரையும் (2020 மே 18) சமர்பித்திருக்காததுடன் சமர்பித்திருந்த 03 பீடங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்கையில் 21 நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலாதிருந்தது. | அவ்விரண்டு பீடங்களின் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் 2019 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் நிரைவேற்ற இயலாமலிருந்த செயற்பாடுகளை 2020 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டதிற்கு உள்ளடக்கி அவ்வாண்டில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | குறித்த முன்னேற்றத்தை சமர்பிக்க வேண்டியதுடன் நோக்கத்தை அடைந்து கொள்ள செயற்பட வேண்டும். |